மே முதல் நாளை, தொழிலாளர்களுக்குரிய மரியாதையையும், மதிப்பையும், அவர்களது உரிமையையும் போற்றும் வகையில் மதராஸ் பெர்டிலைசர்ஸ் லிமிடெட் (MFL) தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் தலைவரான கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள், 1.5.2026 அன்று காலை, MFL தொழிற்சாலை முகப்பில் கழகக் கொடியேற்றினார். உடன் எம்.எப்.எல்.தொழிற்சங்க நிர்வாகிகள் உடனிருந்தனர்.

தி.மு.க. தலைமையிலான

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி அமோக வெற்றி பெறும்!

மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் பெ.சண்முகம் பேட்டி!

விருதுநகர், மே. 3-

வர்த்தக சிலிண்டர் விலையேற்றம் ஓட்டல் தொழில் முடங்கி பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழக்கும் அபாயம் உள்ளது என்று சண்முகம் வேதனை தெரிவித்து உள்ளார்.

மே தினத்தை முன்னிட்டு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் விருதுநகர் மாவட்ட கட்சி அலுவலகத்தில் நேற்று செங்கொடி ஏற்றி வைத்தார். பின்னர் அவர், செய்தியாளர்களிடம் கூறிய தாவது:

அமெரிக்காவும், இஸ்ரேலும் ஈரான் மீது தொடுத்த யுத்தத்தினால் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக காஸ் விலை மிக கடுமையாக உயர்ந்துள்ளது. பிப்ரவரி 28ம் தேதி யுத்தம் தொடங்கியபோது வெறும் 70 டாலராக இருந்த ஒரு பேரல் கச்சா எண்ணெய் விலை, தற்போது 126 டாலராக உயர்ந்துள்ளது. இதன் விளைவாக வணிக நிறுவனங்களுக்கு வழங்கப்படும் எரிவாயு சிலிண்டர் விலை ரூ.3,250 ஆக உயர்ந்துள்ளது.

இதனால் ஓட்டல் தொழில்கள் முற்றிலும் பாதிக்கப்பட்டு பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. வீடுகளுக்கு வழங்கப்படும் சிலிண்டர்களிலும் தட்டுப்பாடு ஏற்படும் என்று அஞ்சப்படுகிறது. 5 மாநில சட்டமன்றத் தேர்தல் முடிந்த நிலையில் அடுத்த சில நாட்களில் பெட்ரோலிய பொருட்களின் விலையை ஒன்றிய பாஜ அரசு கடுமையாக உயர்த்த இருக்கிறது. இவ்வளவு நாளும் உயர்த்தாமல் இருந்தது தேர்தலை கணக்கில் கொண்டுதான்.

கச்சா எண்ணெய் விலை மிகவும் குறைவாக இருந்த காலத்தில் பெட்ரோலிய பொருட்களின் விலையை குறைக்காமல், தனது நண்பர்களை கொள்ளையடிக்க வைத்த பாஜ அரசு, இன்றைக்கு சர்வதேச நெருக்கடியால் ஏற்படும் சுமை முழுவதையும் மக்கள் தலையில் சுமத்துவது கண்டிக்கத்தக்கது. இவ்வாறு தெரிவித்தார்.

'பெரும்பான்மையுடன் திமுக ஆட்சி அமைக்கும்'

'தேர்தலுக்கு பிந்தைய கருத்துக்கணிப்புகள் என்பது மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தவும் கட்சியினர் மத்தியில் சலசலப்பை உண்டாக்கவும் வெளியிடப்படும் கருத்து திணிப்பே ஆகும். விஜய் ஆட்சி அமைப்பார் என்று ஒரு கருத்துக்கணிப்பு வந்திருக்கிறது. இதை யாரும் ஏற்றுக் கொள்வார்களா? அவரே கூட இதை ஏற்றுக்கொள்ள மாட்டார். நிச்சயமாக திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி அறுதி பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைக்கும்" என்று சண்முகம் தெரிவித்தார்.

விழுப்புரம் தமிழ்நாடு போக்குவரத்து கழக தொ.மு.ச சார்பில் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு கழக கொடியேற்றி இனிப்புகள் மற்றும் நலத்திட்ட உதவிகளை கழக துணைப் பொதுச்செயலாளர், முன்னாள் அமைச்சர் முனைவர் க. பொன்முடி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு வழங்கினார். உடன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட துணைச் செயலாளர் தயா. இளந்திரையன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், நகர செயலாளர் இரா.சக்கரை, பி.வி. ஆர்.சு.விசுவநாதன், சேகர், வாலிபால் மணி, எம்.ஜெ. கிருஷ்ணமூர்த்தி, சே.சூர்யா, ஞானதேவா, சுரேஷ், மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

மே 4ம் தேதி வெற்றிச்செய்தி வரும்

முதல்வர் மு.க.ஸ்டாலின் மீண்டும் முதல்வராக வருவார்!

பிரேமலதா பேட்டி!

சென்னை, மே. 3-

மே 4ம் தேதி வெற்றிச் செய்தி வரும். மு.க. ஸ்டாலின் அவர்கள் மீண்டும் முதல்வராக வருவார் என்று பிரேமலதா கூறினார்.

சென்னை கோயம்பேட்டில் உள்ள தேமுதிக தலைமை அலுவலகத்தில் உலக உழைப்பாளர்கள் தினமான மே தினம் கொண்டாடப்பட்டது. தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா, விஜயகாந்த் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தியதுடன், கொடியேற்றி தொழிலாளர்களுக்கு இனிப்பு வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

தொடர்ந்து பிரேமலதா அளித்த பேட்டி:

கருத்துக்கணிப்பை நான் எப்படி பார்க்கிறேன் என்றால் ஆக்கப்பொறுத்தவர்கள் ஆறப்பொறுங்கள். எல்லாம் முடிந்து இருக்கிறது. இன்னும் 2 நாள்தான் இருக்கு. மே 4ம் தேதி வெற்றிச் செய்தி வரும். எல்லோருக்கும் நல்லதே நடக்கும். எங்கள் மதச்சார்பற்ற வெற்றிக் கூட்டணி அமோக வெற்றி பெறும். அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீண்டும் முதல்வராக வருவார்.

நாங்கள் (தேமுதிக) 10 பேர் போட்டியிட்டுள்ளோம். கேப்டன் ஆசீர்வாதத்துடன் 10 பேரும் சட்டசபைக்கு செல்வோம். எல்லோரும் வாழ்த்தினாலும் தே.மு.தி.க. தான், திட்டினாலும் தே.மு.தி.க. தான். பழுத்தமரம் தான் கல்லடிபடும் என்ற விமர்சனங்களுக்கு மே 4ம் தேதி பதில் கொடுக்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

வாக்கு எண்ணும் மைய முகவர்களுக்கான ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ ஆலோசனை வழங்கினார்!

வேலூர், மே.3-

நடந்து முடிந்த சட்டமன்ற பொதுத் தேர்தலில் வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க.விற்குட்பட்ட சட்டமன்ற தொகுதிகளில் பதிவான வாக்கு எண்ணும் பணி குறித்து வேலூர் தெற்கு மாவட்டச் செயலாளரும், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினருமான ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கினார்.

நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தலில் வேலூர் தெற்கு மாவட்ட திமுக - விற்குட்பட்ட 43 - வேலூர், 44 - அணைக்கட்டு, 46 குடியாத்தம் ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளில் கடந்த 23.04.2026 அன்று நடந்த வாக்குபதிவின் போது வாக்காளர்களால் பதிவு செய்யப்பட்ட வாக்குகள் எண்ணும் பணி வேலூர் அரசு தந்தை பெரியார் தொழில்நுட்ப மற்றும் பொறியியல் கல்லூரியில் 04.05.2026 திங்கட்கிழமை அன்று காலை 07.00 மணி முதல் நடைபெற உள்ளது. இதன் பொருட்டு மூன்று சட்டமன்ற தொகுதிகளின் திமுக மற்றும் கூட்டணி கட்சி சார்பில் தேர்வு செய்யப்பட்ட வாக்கு எண்ணும் மைய முகவர்கள் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து கழக சட்டத்துறை மூலமாக காணொளி காட்சி ஆலோசனை கூட்டம் 02.05.2026 சனிக்கிழமை அன்று முற்பகல் 11.00 மணிக்கு வேலூர் சட்டமன்ற தொகுதி சார்பில் வேலூர் பேபி மஹாலிலும், அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி சார்பில் வேலூர் தெற்கு மாவட்ட திமுக அலுவலகத்திலும், குடியாத்தம் சட்டமன்ற தொகுதி சார்பில் குடியாத்தம் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள ஹயக்கிரிவர் திருமண மண்டபத்திலும் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வேலூர் தெற்கு மாவட்ட செயலாளரும், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ ஆலோசனை வழங்கினார்.

எனவே வேலூர், அணைக்கட்டு மற்றும் குடியாத்தம் ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளில் திமுக மற்றும் கூட்டணி கட்சி சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்கள் மற்றும் அந்தந்த தொகுதிகளில் வேட்பாளர்களுக்காக தேர்வு செய்யபட்ட வேட்பாளர்களின் நேரிடை முகவர்கள், வாக்கு எண்ணும் மைய முகவர்கள் கலந்துகொண்டனர்.

வாக்கு எண்ணிக்கையின் கடைசி சுற்று வரை

வாக்கு எண்ணிக்கை முகவர்கள் விழிப்புடன் இருந்து கண்காணிக்க வேண்டும்!

விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!



செஞ்சி, மே. 3-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதி செஞ்சி ஒன்றியம் மற்றும் செஞ்சி அனந்தபுரம் பேரூர் கழக நிர்வாகிகள் வாக்கு எண்ணிக்கை முகவர்கள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் செஞ்சியில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளர், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். செஞ்சி மத்திய ஒன்றிய செயலாளர் விஜயராகவன், அனந்தபுரம் நகர செயலாளர் சம்பத் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியர் அலிமஸ்தான் அனைவரையும் வரவேற்றார்.

ஆலோசனை கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ கலந்துகொண்டு பல்வேறு ஆலோசனை வழங்கினார்.

அப்போது அவர் பேசுகையில் நடைபெற்ற செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் தேர்தலில் பணியாற்றிய ஒன்றிய கிளைக் கழக நிர்வாகிகள், பேரூர் கழக நிர்வாகிகள் ,வார்டு கழக செயலாளர்கள். உள்ளிட்ட நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து கொண்ட மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் எம். எல்.ஏ. மே 4 ஆம் தேதி திண்டிவனம் அரசு பொறியியல் கல்லூரியில் செஞ்சி சட்டமன்றத் தொகுதி வாக்கு எண்ணிக்கையின் போது வாக்கு எண்ணும் முகவர்கள்கவனமுடன் விழிப்புடன் பணியாற்ற வேண்டும்.

ஒவ்வொரு சுற்று வாக்குப்பதிவின் எண்ணிக்கையை கண்காணிக்க வேண்டும். வாக்கு எண்ணிக்கையின் கடைசி சுற்று வரை வாக்கு எண்ணிக்கை முகவர்கள் விழிப்புடன் இருந்து கண்காணித்து பணியை மேற்கொள்ள வேண்டும் என அவர் அறிவுறுத்தினார்.

கூட்டத்தில் மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், செஞ்சி ஒன்றிய துணை சேர்மன் ஜெயபாலன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை ,பொதுக் குழு உறுப்பினர் மணிவண்ணன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திலகவதி விஜயகுமார், உள்ளிட்ட ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் ஊராட்சி கழக நிர்வாகிகள் பாக முகவர்கள் அணி அமைப்பாளர்கள் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் அனைவருக்கும் நன்றி கூறினார்.

நாளை (4ம் தேதி) காரைக்குடியில்

சிவகங்கை மாவட்டத்திற்கான நான்கு தொகுதிகளின் வாக்கு எண்ணிக்கை!

8 மணிக்கு துவக்கம்!

சிவகங்கை. மே 3 .

கடந்த ஏப்ரல் 23ஆம் தேதி தமிழகசட்டமன்றத் தேர்தலுக்கான வாக்கு பதிவு நடைபெற்றது . இதில் சிவகங்கை மாவட்டத்தில் சிவகங்கை, திருப்பத்தூர், காரைக்குடி, மானாமதுரை தனிஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு நடைபெற்று முடி வடைந்தது. மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் காரைக்குடியில் உள்ள அழகப்பா பொறியியல் கல்லூரி வளாகத்தில் மூன்று அடுக்கு போலீஸ் பாதுகாப்புடன் பாதுகாப்பான அறையில் வைக்கப்பட்டுள்ளது. நாளை 4ம்தேதி திங்கள் கிழமை நான்கு தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை துவங்குகிறது.

முதலில் காலை 8 மணிக்கு தபால் வாக்குகளும் அதனைத் தொடர்ந்து காலை 8.30மணிக்கு நான்கு தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கைகளும் தொடங்குகிறது. ஒரு சட்டமன்ற தொகுதிக்கு 14,மேஜைகள் வீதம் 56மேஜைகள் உட்பட மொத்தம் 76 மேஜைகளில் வாக்குகள் எண்ணப்படுகிறது. காரைக்குடியில் 28 சுற்றும், திருப்பத்தூரில் 27 சுற்றும், சிவகங்கையில் 29 சுற்றும் ,மானாமதுரையில்27சுற்று வாக்குகள் என்னப்பட உள்ளது.

இதில் சிவகங்கை மாவட்டத்தில்திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் 5வது முறையாக அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், காரைக்குடியில் காங்கிரஸ் வேட்பாளர் எஸ்.மாங்குடி, மானாமதுரையில் இரண்டாவது முறையாக திருமதி தமிழரசி ரவிக்குமார் சிவகங்கை தொகுதியில் நடிகர் கருணாஸ் ஆகியோர் போட்டியிடுகிறார்கள்.

வாக்குகள் எண்ணப்படும் இடமான காரைக்குடி அழகப்பா பொறியியல் கல்லூரி அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் கல்லூரி வளாகத்தைச் சுற்றி மூன்றடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சியில் நடைபெற்ற செஞ்சி ஒன்றிய திமுக நிர்வாகிகள், ஓட்டு எண்ணிக்கை முகவர்களுக்கான ஆலோசனைக் கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளர்,முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார் உடன் ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன் விஜயராகவன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உள்ளனர்.

மேற்குவங்க வாக்கு எண்ணிக்கை

தேர்தல் ஆணையத்துக்கு உச்சநீதிமன்றம் உத்தரவு!

கொல்கத்தா, மே. 3-

மேற்கு வங்கத்தில் வாக்கு எண்ணிக்கையின் போது ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசு பணியாளர்களை கலந்து நியமிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையத்துக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேற்குவங்க சட்டப்பேரவை இரண்டு கட்டங்களாக சட்டப்பேரவை தேர்தல் நடைபெற்று முடிவடைந்துள்ளது. இந்த தேர்தலில் பதிவான வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனைத்தும் வாக்கு எண்ணும் மையங்களில் பலத்த பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், வாக்கு எண்ணிக்கை மேற்பார்வை பணிகளுக்கு ஒன்றிய அரசு ஊழியர்களை மட்டுமே தேர்தல் ஆணையம் நியமித்துள்ளதாக புகார் எழுப்பி உச்சநீதிமன்றத்தில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி வழக்கு தொடர்ந்து இருந்தது. இந்த வழக்கை அவசர வழக்காக விசாரிக்க வேண்டும் என்று திரிணாமுல் காங்கிரஸ் கோரிக்கை வைத்தது.

இதனைத் தொடர்ந்து இந்த வழக்கை விசாரிக்க சிறப்பு அமர்வு அமைக்கப்பட்டது. நீதிபதி நரசிம்மா தலைமையிலான அமர்வில் வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது, ஏற்கனவே ஒவ்வொரு மேசையிலும் ஒரு மைக்ரோ பார்வையாளரை ஒன்றிய அரசு பார்வையாளராக நியமித்துள்ளது. இதற்கு மேலும் ஒரு மத்திய பார்வையாளர்நியமிக்கப்பட்டு வருவதாக கபில் சிபில் குற்றம் சாட்டினார். மாநில அரசு பணியாளர்களையும் மேற்பார்வையாளர்களாக நியமிக்க வேண்டும் என்று அவர் வாதிட்டார்.

இதனைத் தொடர்ந்து தேர்தல் ஆணையத்தின் சுற்றறிக்கையில் ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசு ஊழியர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்ற தேர்தல் விதிமுறையை நீதிபதிகள் சுட்டிக்காட்டினர். அதன்படியே நியமனம் நடத்தப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தரப்பில் வாதிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து, மாநில அரசு ஊழியர்கள் மற்றும் ஒன்றிய அரசு ஊழியர்கள் இருவரையும் மேற்பார்வை பணிகளுக்கு கலந்து நியமிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தெரிவித்தது. தேர்தல் ஆணையம் தனது சொந்த சுற்றறிக்கையை முறைப்படி அமல்படுத்த வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தது.

தேனி மாவட்டம் பிசி பட்டி பேரூராட்சியில் மே 1 தொழிலாளர் தினத்தை முன்னிட்டு பழனிசெட்டிபட்டி பேரூராட்சி தலைவர் வழக்கறிஞர். மிதுன் சக்கரவர்த்தி ஆட்டோ சங்க தொழிலாளர்கள் மற்றும் துப்புரவு தொழிலாளர்களுக்கு இனிப்பு வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார்.